**கவனிக்க.-** *2017.07.21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2030 - 2017 ජූලි මස 28 වැනි සිකුරාදා - 2017.07.28

*2030 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1294* |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1296* |


**கவனிக்க.-** கே. கே. பியதாஸ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, யூலை மாதம் 21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, ஓகத்து மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஓகத்து மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


1291 - B81192 - 5,403 (2017/07)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## முதியோர்களுக்கான தேசிய செயலகம்

### உள்ளகக் கணக்காய்வாளர்

மேற்குறிப்பிட்ட பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பதாரர்களினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆகக் குறைந்தபட்ச தகைமை**.- வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு :

(1) முகாமைத்துவம் அல்லது வர்த்தக விடயம் தொடர்பிலான களத்துறையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல் ;

அல்லது

இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (ICASL) இடை நிலைப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்;

அல்லது

முகாமைத்துவக் கணக்காளர்கள் பட்டய நிறுவனத்தின் (CIMA) இடைநிலைப் பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்;

அல்லது

பட்டயச் சான்றிதழ் கணக்காளர்கள் சங்கத்தின் (ACCA) இடைநிலைப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்;

அல்லது

கணக்காளர் உயர் டிப்ளோமா பாடநெறி - இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் :

அத்துடன்

தகைமைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உரிய விடயக் களத்துறையில் ஆகக்குறைந்தது ஒரு வருட (01) அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல் (கீழ்வரும் தகைமைகள் 1 அல்லது 2 ஐ பூர்த்தி செய்திருத்தல்):**

(1) மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல்.

(2) "கனிஷ்ட முகாமைத்துவம்" JM சேவைத்தொகுதியின் உரிய களத்துறையின் பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்திருத்தல்.

**2. சம்பளம்**

1. **சம்பள அளவுத் திட்டம்**.- MM 1-1-2006A (ரூபா 53,175 - 10 x 1,375 - 15 x 1,910 - ரூபா 95,575) முகாமைத்துவச் சேவைகள் சுற்றுநிருப இலக்கம் 2/2016இன் பிரகாரம் புதிய சம்பளத் திருத்தத்தின்கீழ் சீர்செய்தல்கள் இடம்பெறும்.

3. **நியமனங்களின் தன்மை**.- பதவி தொடர்பில் சேவையில் நியமிக்கப்படும் நிபந்தனைகள் :

(1) இப்பதவி நிரந்தரமானதாகும்.

(2) ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு உரித்தானது.

4. **சேவை விதிகள்**.- 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் சட்டவிதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் உட்படுதல் வேண்டும்.

5. **வயதெல்லை**.- விண்ணப்பப்படிவங்கள் கையேற்கப் படும் இறுதித் திகதி 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஆகக் கூடிய வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

6. **ஆட்சேர்ப்பு முறைமை**.- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையினூடாக மாத்திரமே ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

7. **விண்ணப்பங்கள் கையேற்கும் இறுதி நாள்**.- விண்ணப்பங்கள் கையேற்கும் இறுதி நாளன்று விண்ணப்பதாரியினால் தேவையான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

8. **விண்ணப்பிக்க வேண்டிய திகதி**.- விண்ணப்ப தாரரினால் முழுமையான சுயவிபரத் தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பப்படிவத்தினைப் பின்வரும் முகவரிக்கு 2017.08.11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். கோரும் பதவியினைக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். பூர்த்திசெய்யப்படாத, தெளிவற்ற அல்லது தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அரச பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப் பப்படிவங்களைத் திணைக்களத் தலைவர்/ நிறுவனத் தலைவரூடாக முன்வைத்தல் வேண்டும்.

சுவிந்த எஸ். சிங்கப்புலி,
பணிப்பாளர்.

முதியோர்களுக்கான தேசிய செயலகம்,
2 ஆவது மாடி 'டீ' தொகுதி,
"செத்சிறிபாய" - இரண்டாவது கட்டம்,
பத்தரமுல்லை,
2017, யூலை 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

**சமூக நலனோம்புகை மற்றும் வலுவூட்டல் அமைச்சு**

முதியோர்களுக்கான தேசிய செயலகம்

**உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்காக பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்து கொள்ளல்**

1. முதல் எழுத்துக்களுடன் பெயர் : திரு./ திருமதி/ செல்வி :----.
2. முழுப்பெயர் :----.
3. நிரந்தர முகவரி :----.
4. தற்பொழுது வசிக்கும் முகவரி :----.
5. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

6. தொலைபேசி இலக்கம் :

நிரந்தர :----.
கையடக்கத் தொலைபேசி :----.

7. பிறந்த திகதி :
ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

8. வயது (2017.08.11 ஆந் திகதி) :
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

9. தேசிய இனம் :----.

10. சிவில் அந்தஸ்து :

திருமணமானவர் ☐ திருமணமாகாதவர் ☐

(உரிய கூட்டினுள் ✓ அடையாளம் இடுக.)

11. தாங்கள் விண்ணப்பிப்பது தகைமை 1 இற்கு அமையவா அல்லது 2 இற்கு அமையவா ? :

☐ தகைமை 1 ☐ தகைமை 2

(உரிய கூட்டினுள் ✓ அடையாளம் இடுக.)

12. பட்டம் தொடர்பிலான விபரம் :
   (i) பல்கலைக்கழகம் :----.
   (ii) பட்டம் பெற்றுக்கொண்ட திகதி :----.
   (iii) விசேடம்/ சாதாரணம் :----.
   (iv) மொழி மூலம் :----.
   (v) வகுப்பு:முதலாவது/இரண்டாவது மேல்/இரண்டாவது கீழ் :----.
13. பட்டம் பெற்றிருக்காவிடின் பெற்றுக் கொண்ட ஏனைய தகைமைகள் தொடர்பான விபரங்கள் :----.
-----.
-----.
14. சேவை பற்றிய விபரம் :
   (i) தற்பொழுது சேவையாற்றும் பதவி :----.
   (ii) நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.
   (iii) தற்பொழுது உள்ள வகுப்பு :----.
   (iv) அத்தரத்திற்கு நியமிக்கப்பட்ட/ பதவியுயர்த்தப்பட்ட திகதி :----.
   (v) 2017.03.24 ஆந் திகதியன்று சேவைக் காலம் :----.
15. உரிய களத் துறையில் அனுபவம் :----.
-----.
-----.
16. ஏனைய கல்வித் தகைமைகள்/தொழில்சார் தகைமைகள் (பட்டப்பின் படிப்பு/ டிப்ளோமா) :----.
-----.
-----.
-----.
17. மொழி தொடர்பிலான திறன் : கூட்டினுள் ✓ அடையாளமிடுக :

| | மிக நன்று | நன்று | சாதாரணம் | திறன் இல்லை |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

**விண்ணப்பதாரியின் உறுதியுரை**

.................................................... என்ற என்னால், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதி கூறுகின்றேன்.

மேலும், நான் இதற்கு முன்னர் அரச சேவையிலிருந்து நீக்கப்பட்ட அல்லது பொதுத் திறமையின்மையின் காரணமாக கட்டாய ஓய்வு பெறுவிக்கப்பட்ட அல்லது பதவியினைத் துறந்த ஒருவரல்ல என்பதை வெளிப்படுத்துகின்றேன்.

நான் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தகைமையற்ற ஒருவர் என உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு நானே பொறுப்பாளியாவேன்.

...............
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

விண்ணப்பதாரர் அரச சேவையில், நியதிச் சட்ட சபை அல்லது நியதிச் சபை நிறுவனத்தில் கடமையாற்றுபவராயின், நிறுவனத் தலைவரின் சான்றுரை:-

திரு./ திருமதி/ செல்வி ......... அவர்கள் ................. அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் நிரந்தர/ தற்காலிக/அமைய ........... என்ற பதவியில் கடமையாற்றுபவர் எனவும் அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிப்பதற்கு முடியும்/ முடியாது.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்,
(உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரை).

திகதி :-----.

7-904

திருத்தம்

**சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு**

தொடர்புடைய அலுவலர் வகைக்குரிய பதவிகளுக்கு பகிரங்க அடிப்படையில் ஆட்சேர்ப்பு (செவி, கட்புல அலுவலர், தகவல் அலுவலர், நுண்குறிகாட்டிகள், புகைப்படக் கலைஞர்)

*2016.01.14 ஆந் திகதிய 1,950 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் இல. 01 - 570 இல் வெளியாகிய சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் தொடர்புடைய அலுவலர் வகைக்குரிய பதவிகளுக்கு பகிரங்க அடிப்படையில் ஆட்சேர்ப்பு (செவி, கட்புல அலுவலர், தகவல் அலுவலர், நுண்குறிகாட்டிகள் புகைப்படக் கலைஞர்) எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் 2 ஆவது பந்தியின் (I) இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமையின்கீழ் செவி, கட்புல அலுவலர் பதவிக்கான கல்வித் தகைமையானது, "பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சமூக விஞ்ஞானம் அல்லது செவி, கட்புல கல்வியை ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்" என திருத்தப்பட்டுள்ளது.*

*2. எனவே, குறித்த வர்த்தமானி அறிவித்தலில் செவி, கட்புல பதவிக்கு உரித்தான பகுதி மற்றும் எமக்குக் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன்.*

*3. அதன் பிரகாரம் செவி, கட்புல பதவிக்காக மாத்திரம் 2017.08.28 ஆந் திகதிவரை மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் அனைத்தும் மாற்றங்கள் இன்றி இருக்கும் என்பதை மேலும் அறியத்தருகின்றேன்.*

ஜனக்க சுகததாஸ,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
"சுவசிரிபாய",
இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

7-1011

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சின் "செயற்றிட்ட உதவியாளர்" (முறைசாராக் கல்வி/ விசேடக் கல்வி) பதவியில் உள்ளோருக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2016 (2017)**

*மேற்படி பதவிகளுக்குரிய உத்தியோகத்தர்களுக்கான உரிய அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகளுக்கமைய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் 2017, நவெம்பர் மாதத்தில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*2. (i) இப்பரீட்சை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதோடு, பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் இணங்க வேண்டும்.*

*(ii) பரீட்சார்த்தி தகைமை பெறுவதற்காக ஆக்கப்பட்ட சட்டதிட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் வேறாக அச்சிடப்பட்டுள்ளது. இந்தச் சட்டங்களை மீறும் பட்சத்தில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.*

*(iii) கல்வி அமைச்சின்கீழ் நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே இந்தப் பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியும்.*

*3. **பரீட்சைக் கட்டணம்**.- இந்த வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்காக முதல் முறையாகத் தோற்றும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. அதன் பின்னரான தடவைகளில் ஒன்றுக்கு அதிகமான அல்லது முழுப் பரீட்சைக்கும் தோற்றுவதாயின் 500 ரூபா பரீட்சைக் கட்டணமும் ஒரு பாடத்திற்கு மாத்திரம் தோற்றுவதாயின் 250 ரூபா பரீட்சைக் கட்டணமும் அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்தவொரு தபால்/ உப தபால் நிலையத்தில் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் குறித்த இடத்தில் கழராதவண்ணம் ஒட்டுதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக பரீட்சைக்கான அறவிடல் மேற்கொள்ளப்பட மாட்டாது என்பதையும் தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். பரீட்சைக் கட்டணத்திற்காக முத்திரை அல்லது காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலும் எந்தவொரு காரணத்தைக் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள் செலுத்துவதோ அல்லது வேறு ஒரு பரீட்சைக்காக மாற்றுவதோ மேற்கொள்ளப்பட மாட்டாது. (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனமாகும்.)*

*4. **விண்ணப்பப்படிவம்**.- விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும். இம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப ஏ4 அளவுத்தாளில் இரண்டு பக்கத்தையும் பாவித்து தயாரிக்கப்பட வேண்டியதோடு தலைப்பு*

இலக்கம் 1 இல் இருந்து 6 வரை முதலாம் பக்கத்திற்கும் மீதி இரண்டாம் பக்கத்திற்கும் வரும் வகையில் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பப் படிவம் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சையின் பெயர் சிங்கள மொழி மூல விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி மூல விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் அவசியமாகும். விண்ணப்பப்படிவத்தினைத் தட்டச்சு மூலம் தயாரித்துக்கொள்ள முடியுமாயின் அதனைச் சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் பூர்த்திசெய்தல் வேண்டும். அதற்கேற்றவாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரிகளால் தமது வலயக் கல்விப் பணிப்பாளர்/ பீடாதிபதி/ திணைக்களத் தலைவர் ஊடாக 2017.08.29 ஆந் திகதிக்கு முன்னதாக கிடைக்கும்படி உதவிச் செயலாளர் (தாபனம்), கல்வி அமைச்சு, "இசுருபாய", பெலவத்த, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். அறிவித்தலில் உள்ளடங்கிய மாதிரிப்படிவத்திற்கு இணைவாகாத மற்றும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலின்றி நிராகரிக்கப்படுவதால், விண்ணப்பப் படிவத்தை அனுப்புவதற்கு முன் அது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு இணைவானதா என்பதையும் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி விண்ணப்பப்படிவம் பிழையின்றிப் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதா என்பதையும் மீண்டும் ஒருமுறை கவனித்துப் பார்க்கும்படி தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பிரயோசனமாகும்.

***பொய்யான தகவல்களுக்கான தண்டனை***.- விண்ணப்பப் படிவங்களைப் பூரணப்படுத்தும்போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்டங்களுக்கு அமைவாக யாரேனும் ஒரு விண்ணப்பதாரி தகுதியற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னதாக அல்லது பரீட்சை நடக்கும் தருணத்தில் அல்லது பரீட்சை முடிவின்போது அவரது பரீட்சார்த்தத் தன்மையை இரத்துச்செய்ய முடியும்.

5. ***விண்ணப்பதாரிகளின் ஆள் அடையாளம்***.- விண்ணப்பதாரிகளால் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் அனைத்துப் பாடங்களின் போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக கீழ்க்காணும் ஆவணங்களில் ஏதாவது ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்கூறிய ஆவணமொன்றைச் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரிகளின் பரீட்சார்த்தத் தன்மை தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

6. வர்த்தமானி அறிவித்தலின்படி தகைமை உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எண்ணக் கருவிற்கு அமைவாக விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேரசூசியின் பிரதியொன்றுடன் அனுமதிப்பத்திரமும் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற உத்தியோகத்தர்களால் பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்கு அவர்களது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறான அனுமதிப் பத்திரமின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்ட உடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்றை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நடைபெறும் தினத்துக்கு குறைந்தது 2 அல்லது 3 நாட்களுக்கு முன்னராவது தமது அனுமதிப்பத்திரம் கிடைக்காவிடின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டபடி அதுபற்றி பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியினைச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின் அத்தகவல்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரப் பிரதியொன்றைத் துரிதமாகப் பெற்றுக்கொள்ளும் வகையில் விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு வேண்டுதல் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாகும். அவ்வாறு விசாரிக்கும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் எந்தத் தகவலையும் உறுதிப்படுத்துவதற்காக தம்வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டுமெனில் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபால் மூலம் அனுப்பும்போது பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றை ஆயத்தமாக வைத்திருப்பது பயனளிக்கும்.

6.1 விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப் படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஏதாவதொரு நிறுவனத்திலிருந்து பரீட்சையைக் கோரும் விண்ணப்பதாரர் என்றால் தமது கையொப்பத்தை நிறுவனப் பொறுப்பாளர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஒருவரினாலும், அப்படி அல்லாத விண்ணப்பதாரராக இருந்தால், தமது கையொப்பத்தை அரச பாடசாலை அதிபர்/ ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், குறித்த பகுதியின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், நீதவான், பிரசித்திபெற்ற நொத்தாரிசு ஒருவர், முப்படை அதிகாரி ஒருவர் ரூ. 2,40,360 அல்லது அதற்குக் கூடுதலான வருடாந்த ஒருங்கிணைந்த சம்பளம் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவை அல்லது நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாராதிபதி அல்லது தலைமை விகாராதிபதி அல்லது வேறு மதம் சார்ந்த இடத்திற்குப் பொறுப்பான ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

6.2 பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது நாளிலேயே பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்ட அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

7. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் உள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றும் வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை லீவு வழங்கப்படுதல் வேண்டும். பயணக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது.

8. பரீட்சை நடைபெறுவது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் மூலமாக மாத்திரமே. அவற்றில் தாம் கல்வி கற்ற மொழியிலோ அரச கரும மொழியிலோ பரீட்சைக்குத் தோற்ற முடிவதோடு, தோற்றும் அனைத்து வினாத்தாள்களுக்கும் பதிலளிக்க வேண்டியது ஒரே மொழியிலாக இருத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றம்செய்ய முடியாது.

9. இந்தப் பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

9.1 பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரர் களின் பெறுபேறுகள் பட்டியலை கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

10. **பரீட்சை ஒழுங்குகள்.**- மேற்கூறிய பதவிகளுக்கான பரீட்சை கீழ்வரும் பாடங்களைக் கொண்டதாகும் :-

| பாடம் | பாட இலக்கம் | புள்ளி கள் | காலம் |
|---|---|---|---|
| 1. பொது நிர்வாகம் அலுவலக முகாமைத்துவம் | 01 | 100 | 3 மணித் தியாலயம் |
| 2. நிதிப் பிரமாணம் மற்றும் கணக்குச் செயற்பாடுகளும் | 02 | 100 | 3 மணித் தியாலயம் |
| 3. கல்வி, கல்விச் சட்டம், நிர்வாகமும் மேற்பார்வையும் | 03 | 100 | 3 மணித் தியாலயம் |
| 4. ஆங்கிலப் பயன்பாடு | 04 | 100 | 3 மணித் தியாலயம் |

(1) பொது நிர்வாகம், அலுவலக முகாமைத்துவம் :

(அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல மைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்துக்கு அதிக கவனம் செலுத்தி இலங்கையின் அரசியல மைப்பு மற்றும் மாகாண சபைச் சட்டங்கள் (திருத்தங் களுடன்) ;

(ஆ) மாகாண சபையினால் தயாரிக்கப்பட்ட நியதிச் சட்டம் ;

(இ) தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் அலுவலக முகாமைத்துவம் அலுவலக முறைமை தாபன விதிக்கோவையின் I, II, III, IV, V, VI, VII, VIII, IX, X, XI, XVI, XXV, XXVI, XXVII, XXIX, XXI, XXXII, XXXIII, XLVII, XLVIII ஆகிய பகுதிகள்.

(2) நிதிப்பிரமாணங்கள் மற்றும் கணக்குச் செயற்பாடுகள் :

(அ) அரசின் நிதிப்பிரமாணம் (பகுதி - I) (X வகுதி தவிர) ;

(ஆ) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சுக்கு அதிக அவதானத்தைச் செலுத்தி தற்போதைய ஆண்டின் வருமானம் மற்றும் செலவு மதிப்பீடு, அவற்றைத் தயாரித்தல், வருமானத் தலைப்பு, நிதி மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டம்) ;

(இ) மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக் கல்வி பணிமனைகள் ஊடாக மேற்கொள்ளக்கூடிய சரியான கணக்கு விவகாரங்களுக்கு உரியதான சட்டம் மற்றும் ஏனைய சட்ட ரீதியான ஏற்பாடுகளும் பிரமாணங்களும் ;

(ஈ) அரச திணைக்களங்களில் பயன்படுத்தப்படுகின்ற கணக்கு விடய நடவடிக்கைகள் ;

(உ) திறைசேரி சுற்றுநிருபங்கள், கல்வி அமைச்சின் சுற்று நிருபங்களில் நிதி மற்றும் கணக்குப் பிரிவுகளுக்குரிய ஏற்பாடுகள் மற்றும் எதிர்காலத்தில் அதிகாரம் வழங்கப்படும் ஏற்பாடுகளும் பிரமாணங்களும் :

(3) கல்வி, கல்விச் சட்டம், நிர்வாகம் மற்றும் மேற்பார்வை :

(அ) விண்ணப்பதாரிகள் கீழ்க்குறிப்பிடப்படும் சட்டங்கள் மற்றும் பாராளுமன்றச் சட்டங்கள் பற்றிய அறிவு மற்றும் விளக்கம் பெற்றிருத்தல் வேண்டும் :

* 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டம்
* 1947 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க திருத்தப்பட்ட கல்விக் கட்டளைச் சட்டம்
* 1951 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க திருத்தச் சட்டம்
* 1953 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க திருத்தச் சட்டம்
* அரச பாடசாலைகள் பற்றிய சட்டவாக்கக் கோவை

* 1960 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கல்லூரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

* 1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கல்லூரி (விசேட ஏற்பாட்டுகள்) சட்டம்

* 1973 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கல்வி (பதவிப் பெயர் மாற்றம் செய்யும்) சட்டம்

* 1976 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பகிரங்க பரீட்சை (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பகிரங்க பரீட்சைச் சட்டம்

* 1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க பிரிவெனாச் சட்டம் மற்றும் அதன்கீழ் வெளியிடப்பட்டுள்ள பிரமாணங்கள்

* 1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கல்லூரி (விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டம்

* 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகச் சட்டம்

* 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டம்

* 1997 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபைச் சட்டம்

* கட்டாயக் கல்விப் பிரமாணம்

* சிறுவர் உரிமைகள் மற்றும் மகளிர் உரிமைகள் தொடர்பாக ஆக்கப்படும் சட்டங்கள் மற்றும் சட்டத் திருத்தங்கள்

* சிறுவர் அதிகார சபைச் சட்டம் மற்றும் படைச் சட்டம் தொடர்பாக.

கல்வி நிருவாகம் :

* கல்வி அமைச்சின் கொள்கை

* மாகாணக் கல்வித் திணைக்களம் உட்பட அமைச்சின் கீழ் உள்ள திணைக்களம் மற்றும் நிறுவனங்கள் மற்றும் கல்வி அமைச்சின் ஒழுங்கமைப்பு மற்றும் அலுவல்கள்

* தேசிய மற்றும் பிரதேச மட்டத்திலான கல்விசார் திட்டங்கள்

* குறிக்கோள் முறைமை (பாடசாலைத் திட்டமிடல் உட்பட) நடைமுறைப்படுத்தல் ஆகியன

* பாடசாலை முகாமைத்துவம் மற்றும் பாடசாலை சமூகத் தொடர்புகள்

* கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை

* விசேட கல்வி வேலைத்திட்டங்கள்

கல்வி மேற்பார்வை :

* பாடசாலை மேற்பார்வைக்கான முறை மற்றும் ஆசிரியர்களது செயலாற்றுகை மதிப்பீடு செய்வதற்காக பயன்படுத்தப்படும் வரையறைகள் (தொழில் மீளாய்வு மற்றும் மீள் பயிற்சி வேலைத்திட்டங்கள்)

* பாடசாலைகளில் தொடர்ச்சியான மதிப்பீட்டு வேலைத்திட்டங்கள்

* பாடசாலைகளில் சுயமதிப்பீட்டு வேலைத் திட்டங்கள்

* மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சின் ஊடாக பாடசாலைகளை மேற்பார்வை செய்தல்

* வெளிக்குழுக்கள் மூலமாக உள்ளக மதிப் பீட்டைப் பரீட்சித்தல்

(ஈ) முறைசாரா தொடர்ச்சியான மற்றும் விசேட கல்வி நிர்வாக அபிவிருத்தி மற்றும் மேற்பார்வை

(கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபங்கள், கைந்நூல்கள் மற்றும் வேறு வெளியீடுகள் பற்றி விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு விண் ணப்பதாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.)

(4) ஆங்கில மொழிப் பாவனை.- கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மற்றும் உயர் தரத்திற்கிடையிலான நடைமுறைப் பிரயோகம்

* தொடர்பாடல் திறன்
* வியாபாரக் கடிதங்கள்
* உரையாடல்
* விண்ணப்பப்படிவங்கள்
* நேர்முகப் பரீட்சை
* அறிக்கைகள்
* இலகுவான பந்தியொன்றைக் கொடுத்து பொருள் விளங்கியுள்ளதா எனப் பார்ப்ப தற்கான சுருக்கமான வினாக்கள்

(சித்தியொன்றைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சப் புள்ளிகள் 40% வீதமோ அல்லது அதற்குக் கூடதலாகவோ உத்தியோகத்தரினால் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.)

11. விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெற்றுள்ளார் எனக் கொள்ளலாகாது.

12. இந்தப் பரீட்சை அறிவித்தல் மூலம் வழங்கப்படாத எந்த விடயம் தொடர்பாகவும் கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

13. சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் வெளியிடப்படுகின்ற மொழிகளுக்கிடையேயான பொருத்தப்பாடின்மை ஏதும் காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே சரியானதாகக் கொண்டு செயற்படுத்தப்படும்.

திஸ்ஸ ஹேவாவித்தான,
செயலாளர் (க. நி.),
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை,
2017, யூலை 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

கல்வி அமைச்சின் "செயற்றிட்ட உதவியாளர்" (முறைசாராக் கல்வி/ விசேடக் கல்வி) பதவியில் உள்ளோருக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2016 (2017)

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

உதாரணம் :- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA

1.2 பின்னுக்கு வரும் பெயரை முன்னாலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களைப் பின்னாலும் குறிப்பிட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்):----.

உதாரணம் :- GUNAWARDANA, H. M. S. K.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. சேவை புரியும் இடமும் முகவரியும் :

2.1 சேவை புரியும் இடத்தின் பெயர் :----.

2.2 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.

(இந்த முகவரிக்கு அனுமதிப்பத்திரம் தபாலிலிடப் படும்)

3. பால் : (ஆண்/ பெண்) :

ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

5. தற்போது வகிக்கும் பதவி :----.
(நியமனக் கடிதத்தில் உள்ளவாறு.)

5.1 நியமனக் கடிதத்தின் இலக்கம் :----.
5.2 நியமனத் திகதி :----.

6. நீங்கள் தோற்றும் தடைதாண்டல் பரீட்சைக்குரிய பாடம்/ பாடங்கள் :
(வர்த்தமானி அறிவித்தலின் 10 ஆவது பந்தியைப் பார்க்க) :

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

7. பரீட்சைக் கட்டணம் (தேவையாயின் மாத்திரம்) :

(i) செலுத்திய பணம் : ரூ. ----.

(ii) பணம் செலுத்திய தபால்/ உப தபால் நிலையம் : ----.

(iii) செலுத்திய திகதி :----.

(iv) பற்றுச்சீட்டின் இலக்கம் :----.

| பற்றுச்சீட்டை அதன் ஒரு பக்கமாக இங்கு ஒட்டவும் (தேவையாயின் மட்டும்)<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்மிடம் வைத்திருப்பது பயனளிக்கும்.) |
|---|

மேற்குறிப்பிடப்பட்ட விபரங்கள் சரியானவை எனவும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துடையோன் எனவும் வெளிப்படுத்துவதோடு இந்தப் பரீட்சை நடாத்துவது தொடர்பாகவும் பெறுபேறுகள் வெளி யிடுவது தொடர்பாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஆக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு நான் இணங்குகிறேன் என்பதை வெளிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது அந்நிறுவனத் தலைவருக்குப் பதிலாக ஒப்பமிடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரின் முன்னிலையில் விண்ணப்பதாரியினால் கையொப்பம் இடப் படல் வேண்டும்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

எனது அலுவலகத்தின்/ பாடசாலையின்/ கல்விக் கல்லூரியின்/ஆசிரியர் கலாசாலையின்/ஆசிரியர் மத்திய நிலையத்தின்/ உத்தியோகத்தர் ஒருவராகவும் நான் தனிப்பட்ட முறையில் தெரிந்தவருமான திரு./ திருமதி/ செல்வி ............................., என்பவர் ............. ஆந் திகதியில் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்
(அருகிலுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்).

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

(1) மேலே வழங்கப்பட்டுள்ள விபரங்களைப் பரீட்சித்துப் பார்த்ததாகவும்,

(2) உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர் எனவும்,

(3) உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவை என்பதால் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்/ உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின்/ வலயக் கல்விப்
பணிப்பாளரின்/ பீடாதிபதியின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.
(தேவையற்றவைகளை வெட்டி விடவும்.)

7-782

---

## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

சமூகப்பணிக் கல்லூரி

### சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25ஏ ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனமாக்கப்பட்டது.*

சமூகப்பணி முதுமாணி

(MSW) - 2017/2018

மேற்குறித்த பாடநெறிக்காக உள்நாட்டு மற்றும் சார்க் நாட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின்கீழ் இயங்கும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் ஏழாவது தடவையாக இப்பாடநெறிக்கான விண்ணப்பம் கோருவதில் பெருமையடைகிறது.

தொழில்வாண்மை ரீதியாகவும் முகாமைத்துவ ஆற்றல்களையும் கொண்ட மனித வளத்தையும் சமூக நலன்புரிக்கான தேர்ச்சிபெற்ற சேவையினையும் வழங்குவதற்கும் சமூக அபிவிருத்திக்கு நிறுவன ரீதியான வலையமைப்பினை வழங்குவதும் இப்பாடநெறியின் நோக்கமாகும்.

***விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்.*** - விண்ணப்பதாரிகள் பின்வரும் அடிப்படைத் தகைமைகளுள் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :

* ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொண்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புடனான கௌரவ இளமாணிப் பட்டம்;

அல்லது

* ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொண்ட பட்டத்துடன் ஒரு வருட பட்டப் பின் கற்கை;

அல்லது

* ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொண்ட பட்டத்துடன் பட்டம் பெற்ற பின்னரான மூன்று வருட சமூக நலன்புரி நிறுவனமொன்றில் பணியாற்றிய அனுபவம் ;

அல்லது

* பீட சபையின் சிபாரிசின் அடிப்படையில் தேசிய சமூக அபிவிருத்தியினால் தனித்தனியாக கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும் இளமாணி பட்டத்திற்குச் சமமான தொழில்வாண்மைத் தகைமைகளும் அதன் பின்னரான மூன்று வருட சமூக நலன்புரி நிறுவனமொன்றில் பணியாற்றிய அனுபவம்,

அத்துடன்

* ஆங்கில மொழிப் புலமை.

மொழி மூலம் : ஆங்கிலம்

காலம் : இரண்டு கல்வியாண்டுகள் (வெள்ளிக்கிழமை மாலையிலும் சனிக்கிழமைகளில் முழுநாளும்)

பாடநெறிக்கான கட்டணம் : ரூபா 2,27,000.

சார்க் நாட்டு மாணவர்களுக்கான கட்டண விபரம் வேண்டுகோளுக்கேற்ப வழங்கப்படும்.

மேலதிக தகவல்களையும் விண்ணப்பப்படிவத்தையும் எமது இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யலாம் : www.nisd.lk

சரியான முறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை 2017.08.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் "பதிவாளர், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், இல. 488ஏ, நாவலை வீதி, இராஜகிரிய" எனும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

உரிய ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

பட்டச் சான்றிதழ் மற்றும் ஏனைய சான்றிதழ்கள்.

தொழில் அனுபவச் சான்றிதழ்கள்.

முதுமாணிக்கான விண்ணப்பம் : 2017/ 18 என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
தொலைபேசி இல. : 011-2882506/ 7, 011-2076021
தொலைநகல் இல. : 011-2882502
மின்-அஞ்சல் : nisd@slt.lk
இணையத்தளம் : www.nisd.lk

7-859

---

## சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

### முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத குழு - 02 சேவைக்குரிய பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு - 2017

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சிற்குரிய கீழுள்ள பதவிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களை திறந்த அடிப்படையில் நிரப்புவதற்கு தகைமையுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* மருத்துவ விநியோக உதவியாளர்கள்
* உணவு மேற்பார்வையாளர்
* ஆண்/ பெண் விடுதிப் பொறுப்பாளர்

**2. பதவிக்கு உரித்தான கல்வித் தகைமைகள் :**

(அ) *ஆண்/ பெண் விடுதிப் பொறுப்பாளர் பதவி.-* சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இன்னும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

மற்றும்

கல்விப் பொதுத்தராதர (உயர் தரம்) பரீட்சையில் குறைந்தது ஒரு பாடத்திலாவது (சாதாரண பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல் ;

(ஆ) *உணவு மேற்பார்வையாளர்.-* சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், மனையியல் மற்றும் இன்னும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

மற்றும்

கல்விப் பொதுத்தராதர (உயர் தரம்) பரீட்சையில் குறைந்தது ஒரு பாடத்திலாவது (சாதாரண பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல் ;

(இ) *மருத்துவ விநியோக உதவியாளர்.-* சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

*மற்றும்*

மருத்துவ விநியோக உதவியாளர் பதவிக்கு மாத்திரம் கல்விப் பொதுத்தராதர (உயர் தரம்) பரீட்சையில் இரசாயனவியல் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

3. **அனுபவம் :**

* உணவு மேற்பார்வையாளர் மற்றும் மருத்துவ விநியோக உதவியாளர் பதவிகளுக்கு உரித்தில்லை.

* ஆண்/பெண் விடுதிப் பொறுப்பாளர் பதவிக்கு அரச அல்லது அரசுடன் இணைந்த அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் விடுதிப் பொறுப்பாளராக 02 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

* ஆண்/ பெண் விடுதிப் பொறுப்பாளர் பதவிக்கு இணைத்துக்கொள்வதற்குத் தகைமை பெற்றவர்களுக்கு ஒரு மாத நிறுவனப் பயிற்சியொன்று வழங்கப்படும்.

4. **தொழில் தகைமை :**

* உணவு மேற்பார்வையாளர் மற்றும் ஆண்/ பெண் விடுதிப் பொறுப்பாளர் பதவிகளுக்கு உரித்தில்லை.

* மருத்துவ விநியோக உதவியாளர் பதவிக்கு மாத்திரம் கணினி சொற்செயலாக்கம்/ தட்டெழுத்து/ ஆவணங்கள் பதிவு தொடர்பான மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய 06 மாதத்திற்குக் குறையாத கற்கைநெறியொன்றைக் கற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- உணவு மேற்பார்வையாளர் பதவிக்கு இணைத்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளுக்கு 03 மாதகாலப் பயிற்சியொன்று வழங்கப்படும். அப்பயிற்சியை சிறப்பாக நிறைவுசெய்த பின்னர் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் நடாத்தப்படும் பரீட்சையில் தேர்ச்சி அடைந்தவர்கள் உணவு மேற்பார்வையாளர் பதவியில் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர். பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுபவர்களின் சேவை இடைநிறுத்தப்படும். பயிற்சிக்கான கொடுப்பனவொன்று வழங்கப்பட மாட்டாது.

5. **ஏனைய பொது தகைமைகள் :**

(அ) 2017.08.28 ஆம் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 30 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) மருத்துவ விநியோக உதவியாளர் பதவிக்கு ஆண்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும் என்பதுடன், உணவு மேற்பார்வையாளர் பதவிக்கு பெண்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

(இ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரி சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(உ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு ஆட்சேர்ப்பிற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளும் தேவையான பிரகாரம் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(ஊ) இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும், பதவிக்குரிய கடமைகளைச் செய்வதற்கும், போதியளவு உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

6. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பப்படிவம் இந்த அறிவிப்பின் இறுதியில் உள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம் ஏ-4 அளவினையுடைய கடதாசியின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து முதல் பக்கம் 1.0 இலிருந்து 5.1 வரையிலும், இரண்டாம் பக்கம் 5.2 இலிருந்து 8.0 வரையிலும் என்ற முறையில் தயாரித்து தமது கையெழுத்தில் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்தில் "பற்றுச்சீட்டு" என்னும் இடத்தில் இலங்கை வங்கி, தப்ரோபேன் கிளை, இலக்கம் 7041318 எனும் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம், பரீட்சைக் கட்டணம் சேகரித்தல் எனும் கணக்கிற்கு" ரூபா 500 ஐச் செலுத்தி அந்தப் பற்றுச்சீட்டு கழராதவகையில் உரிய இடத்தில் ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டை ஒட்டமுன் அதன் பிரதியொன்றை எடுத்துக்கொள்ளவும்.)

(இ) விண்ணப்பத்தில் அரச பாடசாலை அதிபர் ஒருவர்/சமாதான நீதவான் ஒருவர்/சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர்/ சட்டத்தரணி அல்லது முப்படையில் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் அல்லது பொலிஸ் பதவியில் வர்த்தமானி அறிவிப்பு வழங்கப்பட்ட அதிகாரமுள்ள உத்தியோகத்தர் அல்லது 3,34,452 ரூபாவிற்கு மேற்பட்ட வருடாந்த ஒருங்கிணைந்த சம்பளத்தைப் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் பதவிநிலை தரத்தில் உள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தை 9 x 4 அளவிலான கடித உறையில் இட்டு அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "....................................... பதவிக்கு இணைத்துக்கொள்ளல் - 2017" எனக் குறிப்பிட்டு 2017.08.28 ஆந் திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் (நிர்வாகம்) 03, சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, "சுவசிறிபாய", இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

7. அரசாங்கத்தில் அல்லது அரசாங்கத்துடன் இணைந்த தாபனங்களில் சேவை செய்யும் உத்தியோகத்தர்கள் இதற்காக விண்ணப்பிப்பதாயின், அவ் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பப்படல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறியத்தரப்பட மாட்டாது என்பதுடன், குறித்த தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் மாதிரிப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

9. அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளுள் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய, அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் உடற்தகைமை மற்றும் தகைமைகளைப் பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு அமைய III ஆம் தரத்திற்கு இணைத்துக்கொள்ளப்படுவர்.

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் கடிதம் மூலம் அறிவிக்கப்படுவதுடன், பெறுபேறுகள் www. health.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

10. எழுத்துப் பரீட்சை தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

| | வினாப் பத்திரத்தின் பெயர் | விடயம் | காலம் | அதிகூடிய புள்ளி | சித்திபெற வேண்டிய ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|---|
| (i) | பொது அறிவு | வெளிக்கள காரணிகள் சம்பந்தமாக அபேட்சகர் கொண்டுள்ள திறமை மற்றும் பொது அறிவைப் பரிசீலித்தல் | 02 மணித்தியாலம் | 100 | 40% |
| (ii) | நுண்ணறிவு | சொற்கள் மற்றும் உருவமாக வழங்கும் சிக்கல் தொடர்பாக அபேட்சகர் வெளிப் படுத்தும் ஆற்றல் மற்றும் வெளிப் படுத்தும் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளும் ஆற்றல், குறிப்பிட்ட கால எல்லை மற்றும் சந்தர்ப்பத்திற்குள் தொடர்பை விளங்கிக்கொள்வதில் அபேட்சகர் கொண்டுள்ள திறமையைக் கணிப்பிடுதல் | 1 1/ 2 மணித்தியாலம் | 100 | 40% |

(அ) அனைத்து எழுத்து மூலமான விடைப்பத்திரங்களிலும் தெளிவற்ற எழுத்துகள் மற்றும் எழுத்துப் பிழைகளுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

(ஆ) மேற்படி ஒவ்வொரு பாடத்திற்கும் 40% புள்ளிகளையாவது பெற்றிருத்தல் வேண்டும். திறமைகளின் அடிப்படையில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நியமனங்கள் வழங்கப்படும்.

11. பரீட்சார்த்திகளை உறுதிப்படுத்தல்.- எல்லாவிதத்திலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்துப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவை ஏற்றுக்கொள்ளப்படும் :

(1) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆள் அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(3) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

12. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :

(அ) உங்களுக்கு உரித்தான ஓய்வூதியம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு நீங்கள் கட்டுப்படல் வேண்டும்.

(ஆ) இப்பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவர்கள் ஆவர்.

(இ) பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இன் பிரகாரம் அல்லது அதனுடன் தொடர்புள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் இப்பதவிக்கு உள்வாங்கப்பட்டு 05 வருடங்களுக்குள் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

(ஈ) 03 வருடத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(உ) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத குழு - 02 சேவையின் ஆட்சேர்ப்பு விதிமுறைகள் மற்றும் அதனுடன் தொடர்பான காலத்துக்குக்காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள், தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணம், அரச சேவை ஆணைக்குழுவின் சேவை நிபந்தனை மற்றும் அரசினால் விதிக்கப்படும் கட்டளைகளுக்கும் விதிமுறைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

13. பதவிகளுக்கு நியமிக்கும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுவது, அச்சந்தர்ப்பத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமையவாகும். அதன் பிரகாரம், நிரந்தர நியமனம் வழங்குவதற்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு தீர்மானம் செய்தால் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் நியதிகள் மற்றும் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஏற்ப அப்பதவியின் III ஆம் தரத்திற்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும். உணவு மேற்பார்வையாளர், ஆண்/பெண் விடுதிப் பொறுப்பாளர் மற்றும் மருந்துவ விநியோக உதவியாளர் பதவிகளுக்கு பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இல் MN - 01-2006 சம்பள அளவு ரூபா 27,140 - 10 x 300 - 11 x 350 - 10 x 495 - 10 x 660 - ரூபா 45,540 இற்கு உரித்தாவதுடன், சம்பளம் வழங்குவது அச்சுற்றறிக்கையின் அட்டவணை II இற்கு அமைய மேற்கொள்ளப்படும்.

14. இத்துடன் உள்ள மாதிரிப்படிவத்திற்கு அமையாத, தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்யாத, முறையாகப் பணம் செலுத்தப்படாத, சரியாக நிரப்பப்படாத மற்றும் பூரணப்படுத்தப்படாத அல்லது தாமதித்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது. தபாலில் ஏற்படக்கூடிய தாமதங்கள் அல்லது காணாமற்போதல் பற்றிய எவ்வித முறைப்பாடுகளும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

15. விண்ணப்பங்களை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாகவும் சரியாகவும் நிரப்பவும். நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டால் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், வழங்கப்பட்ட நியமனம் இரத்துச்செய்யப்பட்டு பதவி நீக்கம் செய்வதுடன், அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு திருப்தியின்மை பட்டியலில் பெயர் உள்வாங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

16. இந்த வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனுமோர் விடயம் சம்பந்தமாக பிரச்சினைகள் தோன்றுமிடத்து அது தொடர்பாக சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித்

தீர்மானமாகும். அத்துடன் வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது வெற்றிடங்களை நிரப்பாமல் இருப்பதும் அல்லது வெற்றிடத்தின் ஒரு பகுதியை நிரப்புதல் தொடர்பான இறுதித் தீர்மானம் சுகாதார அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

17. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஏதாயினுமொரு வித்தியாசம் அல்லது ஒன்றுக்கொன்று முரண் ஏற்படுமிடத்து சிங்கள மொழியில் குறிப்பிட்டவையே செல்வாக்குடையதாகும்.

ஜனக்க சுகததாச,
செயலாளர்,

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.
"சுவசிறிபாய",
இல. 385, அதி. வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2017, யூலை 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின்கீழ் நிலவுகின்ற முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத குழு - 02 (MN - 01 - 2006 (A)) சேவைப் பதவிகளுக்குரிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரல் - 2017**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

சிங்களம் - 1
தமிழ் - 2 ☐
ஆங்கிலம் - 3
(உரிய இலக்கத்தினைக் கூண்டினுள் எழுதவும்.)

பரீட்சைக்குக் கோரப்படும் பதவி மற்றும் விருப்பத்தெரிவு

1. ..........................................
2. ..........................................
3. ..........................................

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதா : SILVA A. D.
Mr./Mrs/Miss :----.
(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. (i) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(ii) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.
(iii) வசிக்கும் மாவட்டம் :----.
(iv) தொலைபேசி இலக்கம் :----.
(v) பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(i) தேசிய அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4. இலங்கைப் பிரசையா ? :

ஆம் ☐ இல்லை ☐

(உரிய கூட்டினுள் ✓ அடையாளம் இடவும்)

5. கல்வித் தகைமைகள் (உரிய சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.) :----.

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சை : பரீட்சை சுட்டெண் : வருடம் :

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 01 | | 05 | |
| 02 | | 06 | |
| 03 | | 07 | |
| 04 | | 08 | |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை : பரீட்சை சுட்டெண் : வருடம் :

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 01 | | 03 | |
| 02 | | 04 | |

(iii) அனுபவம் :

உண்டு ☐ இல்லை ☐

(உரிய கூட்டினுள் ✓ அடையாளம் இடவும்)

உரிய விபரத்தைக் குறிப்பிடவும் :----.

(iv) தொழில் தகைமை (பதவிக்கு உரித்தான) :

உண்டு ☐ இல்லை ☐

(உரிய கூட்டினுள் ✓ அடையாளம் இடவும்)

உரிய விபரத்தைக் குறிப்பிடவும் (சான்றிதழின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்).

6. நீங்கள் ஏதாவது குற்றத்திற்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாகி உள்ளீரா ?

ஆம் ☐ இல்லை ☐

(உரிய கூட்டினுள் ✓ அடையாளம் இடவும்)

ஆம் எனின், விபரங்களைக் குறிப்பிடவும் :----.

7. விண்ணப்பதாரியின் உறுதிமொழி :

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கெட்டிய அளவில் உண்மையானதும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி பற்றுச்சீட்டு இங்கு ஒட்டியுள்ளதையும் உறுதிசெய்கிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விபரம் பிழை அல்லது தவறு எனக் காணப்படுமிடத்து தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் இவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும், தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின் எனின் நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் நன்கறிவேன்.

| பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். அதன் நிழற்படப்பிரதியொன்றைத் தம்மிடம் வைத்திருக்கவும். |
|---|

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த திரு./திருமதி/செல்வி ........................................................................................... என்பவரை நான், தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், அவர் ............................................. ஆந் திகதி எனது முன்னிலையில் அவரது கையொப்பத்தினை இட்டார் என்பதையும் உறுதி செய்கிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :
(பதவி முத்திரை இட்டு உறுப்படுத்தப்படல் வேண்டும்.)
திகதி :----.

7-848